# TOR TIMES OF REPUBLIC

VOICE OF TAMILNADU

# டைம்ஸ் ஆஃப் ரிபப்ளிக்

செப்டம்பர் 2025 | மலர் -04 | இதழ் - 6 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.30/-



## எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக பாஜக விடும் புது அம்பு செங்கோட்டையன்

## விஜய்-ன் ‘‘சனிக்கிழமை‘‘ சுற்றுப்பயண திட்டம்


fast track
Taxi App
உங்களுடன்
பாஸ்ட் ட்ராக்
24/7
25
fast track
Taxi
Scan and Book
Download Now
SCAN TO DOWNLOAD
BOOK YOUR FAST TRACK TAXI NOW
044 2888 9999 | 6000 6000



நிறுவனர் & தலைமை ஆசிரியர்
**சி.நவின் பிரகாஷ்**

# தொகுப்பாளர் உரை

Times of Republic நாளிதழ் சார்பாக உங்கள் அனைவருக்கும் மிலாடி நபி மற்றும் ஓணம் தின நல்வாழ்த்துக்கள். இந்த மாதம் நடைபெற்ற பேசும் பொருளாகிய விவாதங்கள், பல பிரபலமான நிகழ்வுகளை தங்களது கருத்துக்களின் மூலம் பதிவு செய்துள்ளோம். பீகாரில் வாக்காளர் அதிகார யாத்திரையில் திரண்ட கூட்டம், அதிமுகவில் பிரிந்தவர்களை சேர்க்கக் கோரி திடீரென கொடி பிடித்த செங்கோட்டையன், பாமகவில் இருந்து நீக்கப்பட்ட அன்புமணி, பாஜக கூட்டணியில் இருந்து விலகிய டிடிவி தினகரன், திருச்சியில் இருந்து சுற்றுப்பயணத்தை தொடங்கிய விஜய் போன்ற பல்வேறு சுவாரஸ்யமான தகவல்களை தாங்கி வருகிறது இந்த இதழ். இவை அனைத்தும் வாசகர்கள் இடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, பல்வேறு விவாதங்களுக்கும் வித்திட்டவை. நமது Times of Republic நாளிதழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் உங்களின் பேராதரவுடன் வளர்ந்து வரும் சக்தி வாய்ந்த ஊடகமாக திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. வாசகர்கள் ஆகிய நீங்கள் தான் எங்களுக்கு ஆணி வேர். உங்களால் தான் இமயத்தை தொட முடியும். என்றும் உங்கள் ஆதரவோடு பயணிக்கிறேம்.

**– Times of Republic**
**குழுவின் சார்பாக நன்றிகள்!**



முதன்மை ஆசிரியர்
**ஜெ. சாமிநாதன்**

# தலையங்கம்

**அண்டை நாடுகளில் புரட்சி- சொல்வது என்ன?**

அண்டை நாடுகளான இலங்கை, வங்கதேசம், நேபாளத்தில் மக்கள் புரட்சி ஏற்பட்டு, ஆட்சி மாற்றம் கண்டுள்ளதை கண்கூடாக பார்த்தோம். 2022 முதல் நடப்பாண்டு வரை 3 ஆண்டுகளிலேயே இவை நிகழ்ந்ததன் காரணம் ஒன்று மட்டுமே. மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் இடையே உருவான மாபெரும் இடைவெளி தான். மூன்று நாடுகளிலும் மக்களாட்சி நடைபெற்றாலும், அதிகார போதையில் மமதையில் மக்களின் வாழ்வாதாரத்தை கண்டுகொள்ளாமல் தங்கள் இஷ்டத்துக்கு வாழ்ந்ததன் விளைவை அனுபவித்து வருகிறார்கள். இலங்கையில் கொடிகட்டிப் பறந்த ராஜபக்சே குடும்பம், அதே நாட்டில் பேச்சு மூச்சு இல்லாமல் ஒடுங்கி போய் கிடக்கிறது. வங்கதேச தந்தை எனப்படும் முஜிபுர் ரகுமானின் மகளான பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, நாடு தப்பி, இந்தியாவில் தஞ்சம். அடுத்து நேபாளத்தில் மூன்றே நாளில் முடிக்கப்பட்ட சர்மா ஒலியின் ஆட்சி. மக்கள் புரட்சிக்கு முன்னால் ஆட்சியாளர்களின் அகங்காரம் செல்லுபடியாகாது என்பதற்கான சாட்சிகள் இவை. அதிகார போதையில் எதிர்க்கட்சிகளை வஞ்சிப்பது, மக்களுக்கு எதிரான சிந்தனை, கருத்துக்களை விதைப்பது, ஒடுக்குவது, ஒருசாராரை குறிவைத்து தாக்குவது, வேண்டியவர்களுக்கு எல்லாம் செய்வது, பகட்டு வாழ்க்கை எல்லாம் தூசுதான். அரசியல் அமைப்பில் ஒவ்வொரு அமைப்புக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை தனக்கென மாற்றி அமைத்து, மிரட்டல் மூலம் சாதிக்க நினைத்தால் கிடைப்பது என்னவோ அதுதான். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற வாசகத்தை முன்னோர்கள் சும்மா சொல்லி வைக்கவில்லை.

# TIMES MAGAZINE

## Editor & Publisher



சி.நவீன் பிரகாஷ்

## Editor-in-Chief



ஜெ.சாமிநாதன்

## Advisory Panel

சேகர், எஸ்.பி., (சிறைத்துறை ஓய்வு)



அஜய் பென்சமின்


## Legal Advisors



ஆர்.சி.பால்கனகராஜ்



கிருஷ்ணகுமார்



அக்பர்பாஷா



கார்த்திக்



ஜெ.ரூபன்

## Chief Reporters



எஸ்.ஜாகீர் ஹுசேன்

டி.தாகூர்

பி.ஹரிஹரசுதன்



கே.கார்த்திகேயன்

ஜெ.நவநீதகிருஷ்ணன்



எஸ்.நடராஜ்



பா.சிவக்குமார்

சி.எஸ்.ஆர்.ஜீவன்

## Administration & Operations



ஆரத்தி . தி
Administration & Operations head



பி. அரசுகுமார்
Senior Video Editor



பா. சுகேஷ்
Senior Video Editor



கதிரேசன் தா
VIDEO EDITOR



நவீன் ராகவேந்திரா மா
Video Editor



ஆண்டோ. எம்
Graphic Designer



பா . சதீஷ் குமார்
Graphic Designer



மோ . யோகலக்ஷ்மி
Graphic Designer



ஆர். மேரில்பேர்ட் தாஸ்
Voice Over Artist

திலகா
Voice Over Artist



ராதிகா நெடுஞ்செழியன்
Voice Over Artist

## Associate Digital News Contributors:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கே.கோபிநாத் | சரண்யா | விக்னேஷ் | பெரியசாமி | ஆர்.மணிகண்டன் | மதிநாதுள் முசால்மாத் |
| தாமரைக்கனி | கோகுலகிருஷ்ணன் | கே.செல்வம் | சைரில் | எஸ்.கவியரசு | பி.வினித்குமார் |
| செந்தில்குமார் | எம்.அரிகாந்த் | கோபிஆனந்த் | எம்.ரிசேஷ் ராஜ் | மாதுரி | டி.விக்னேஷ் |
| பிரமோத் | ஓம் பிரகாஷ் கவுர் | மனோ | இ.பிரசாந்த் | கிளாட்சன் ரிட்சர்ட் | ஹரி பாலசந்திரன் |
| ஜானி ஆம்புரோஸ் | பிரசாத் பெருமாள் | பிரணவ் | சரத்குமார் | ஜெ.எபினேசன் | பி.விக்னேஷ் |
| சாந்தகுமார் | கே.சித்தார்த்தன் | தினேஷ்கவுர் | தினகரன் | அருணாச்சலம் | தீனதயாளன் |
| கே.என்.சி. சரவணகுமார் | சங்கீதா | ஏ.நரேஷ்குமார் | ஏ.பிரேம்குமார் | எஸ்.ஐ. நாராயணன் | பிரபா |
| பாஸ்கோ மாணிக்கம் | சேகர் | ரேவதி | கே.கார்த்திகேயன் | கே.வி.பாலச்சந்திரா | ஜி.சதீஷ்குமார் |
| சாமுவேல் | பார்த்திபன் | ஜெ.மோகன்குமார் | சஸ்ஸன் | யூ.ராகுல் | சதீஷ் |
| எம்.கிருஷ்ணகுமார் | சாந்தகுமார் | ஏ.தினேஷ் | மகிமான் | நாராயணசாமி | பிரவீன் |

# மதுரையில் த.வெ.க., மாநாடு

## திடீரென முளைத்த அண்ணா, எம்.ஜி.ஆர். படங்கள்

- 1967, 1977ம் ஆண்டுகளை போல் மாற்றம் கொண்டு வருவாராம்?
- முதல்வரை அங்கிள் என பலமுறை உச்சரித்த விஜய்
- எம்.ஜி.ஆர்., என்.டி.ராமாராவ் வரிசையில் இடம்பிடிக்க துடிப்பு
- தெலுங்கு மெகா ஸ்டார் சிரஞ்சீவி ஆரம்பித்த கட்சி 4 ஆண்டில் சுபம் ஆனது
- கூடும் கூட்டம் எல்லாம் ஓட்டாக மாறுமா?
- தமிழகத்தில் கட்சி தொடங்கிய நடிகர்கள் எங்கே இருக்கிறார்கள்?



மதுரையில் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தை காண சுற்றுவட்டார மாவட்டங்களில் இருந்து சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமானோர் திரள்வார்கள். இதற்கு அடுத்தபடியாக ஆகஸ்ட் 21ம் தேதி மதுரை மாநகரில் மீண்டும் அந்த மக்கள் வெள்ளத்தை பார்க்க வைத்தவர் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய். அக்கட்சியின் இரண்டாவது மாநில மாநாடு, மதுரை அருகே பாரபத்தி எனும் இடத்தில் களைகட்டியது. சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடு, விக்கிரவாண்டியில் அமைக்கப்பட்ட மேடை, நடைபாதையை (விஜய் நடந்து வருவதற்காக நடுவில் அமைக்கப்பட்டது) போல் அப்படியே இருந்தது.

மாநாடு மாலை 4 மணிக்கு தொடங்கும் என அறிவிக்கப்பட்டு இருந்தாலும், முதல்நாள் மாலையிலேயே கூட்டம் கூட ஆரம்பித்தது. பல்வேறு மாவட்டங்களில் இருந்து பஸ், வேன், கார்களில் குவியத் தொடங்கினர், ரசிக தொண்டர்கள். ஆண்களுக்கு போட்டியாக பெண்களும் மாநாட்டு திடலுக்கு முன்கூட்டியே வந்தது, ஆச்சரியத்தில் ஆழ்த்திய அம்சம். ஒரு சிலர் குழந்தைகளுடன் வந்திருந்து, வெயில் கொடுமையில் சிக்கிய அவலமும் கண்டோம்.

வழக்கமாக கட்சிகளின் மாநில மாநாடு என்றால் பல்வேறு திட்டமிடல்கள், நிகழ்ச்சி நிரல்கள், கலை கலாச்சார நிகழ்வுகள், பேச்சாளர்களின் மன்றம், பட்டிமன்றம், தீர்மானங்கள் வாசிப்பு, கட்சித் தலைவரின் உரை என களைகட்டும். ஆனால் எதுவுமே இல்லாமல் நடந்து முடிந்தது, த.வெ.க., மாநாடு. ஒப்புக்காக தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சி என, மங்கள இசை வாத்தியம் மட்டுமே இடம்பெற்றது. விஜய் மேடைக்கு வந்ததும், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மைக்கை பிடித்து, வழக்கமாக அடித் தொண்டையில் பேசி, விஜயை 2026ல் முதல்வராக்குவது உறுதி





என கூறி அமர்ந்தார். அடுத்து நிர்மல்குமார், மாநாட்டுக்கு தடை ஏற்படுத்தியதாக மதுரை மண்ணின் மைந்தர் அமைச்சர் மூர்த்தியை எச்சரித்தார். அதேபோல், நம்ம ஆதவ் அர்ஜூனா, என்ன சொல்ல வர்றார்னு இதுவரைக்கும் புரியல. ஐஆர்எஸ் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற அருண்ராஜ், த.வெ.க.வில் சேர்ந்ததும், அவருக்கு கொள்கை பரப்பு செயலாளர் பதவியை கொடுத்தாரு விஜய். இவராவது மாநாட்டில் கட்சி கொள்கைகள், அத எப்படி செயல்படுத்தப் போறோம் அப்படி இப்படினு எதாவது பேசுவார்னு பார்த்தா, அதே விஜய் புராணம்.

வழக்கம்போல, விஜய் மைக்கை புடிச்சதும், சிங்கம் கதைல ஆரம்பிச்சு, அது வேட்டையாட போகும் போது தான் வெளியில வரும். ஸ்டாலின் அங்கிள் இது நியாயமா அங்கிள் அப்டினு, தாமரை இலைல தண்ணியே ஒட்டாது அப்புறம் எப்டி பாஜக தமிழக மக்கள் மத்தியில ஒட்டும், வழக்கம்போல பெண்களுக்கு பாதுகாப்பு இல்ல, கொள்கை எதிரி பாஜக தான், அரசியல் எதிரி திமுக தான், ஒவ்வொரு வீட்டுக்குள்ள போனதுக்கு அப்புறம் தான் கட்சி ஆரம்பிச்சிருக்கோம்.... இப்டி ஒரே சினிமா டயலாக்கா அவுத்து விட்டார். இத பார்த்த நம்ம பாவப்பட்ட ரசிக தொண்டர்களும், தாவிக் குதித்து ஆட்டம் போட்டுச்சுக.

1967, 1977ம் வருஷத்துல தமிழ் நாட்டுல மிகப் பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது போல, வரும் 2026 தேர்தலிலும் மாற்றம் வரும் என மூச்சிறைக்க பேசி முடிச்சிருக்கார், விஜய்.

## அண்ணா, எம்ஜிஆர் நடுவில் விஜய் படம்

தமிழக வெற்றிக் கழக கொள்கை தலைவர்களாக பெரியார், அம்பேத்கா, காமராஜர், வீரமங்கை வேலு நாச்சியார், அஞ்சலை அம்மாள் என இந்த 5 பேர தான் இதுவரைக்கும் வச்சிருந்தாங்க. மதுரை மாநாட்டுல திடீர்னு பார்த்தா, அண்ணாவையும், எம்.ஜி.ஆரையும் புதுசா சேர்த்துட்டாங்க. அதுவும் ரெண்டு பேத்துக்கும் நடுவுல த.வெ.க. தலைவர் விஜய் இருக்காப்ல. இனி அடுத்த மாநாட்டுக்கு ஜெயலலிதா, கருணாநிதி படங்கள்லாம் வரும்போல. திடீர் திடீர்னு கொள்கை தலைவர்கள் எண்ணிக்கைய கூட்டிக்கிட்டே இருந்தா, ரசிக தொண்டர்கள் குழம்பிருவாங்கலா இல்லையா விஜய்.

## 1967, 1977ம் ஆண்டுகளில் நடந்தது என்ன?

மதுரை மாநாட்டுல புதுசுல இன்னோனு என்னன்னா, 1967, 1977ம் வருஷங்கள்ல தமிழ்நாட்டுல அரசியல் மாற்றங்கள் நடந்தது போல, 2026ம் வருஷ தேர்தல்லேயும் வரும்னு ஒருபில்டப் வேற. அதாவது 1967ல காங்கிரஸ் ஆட்சிய வீழ்த்தி, திமுக ஆட்சிய பிடிச்சது, 1977ல் திமுக ஆட்சிய வீழ்த்தி, அதிமுக ஆட்சிய பிடிச்சது. இதுபோல, 2026 தேர்தல்லேயும் திமுக ஆட்சிய வீழ்த்தி, த.வெ.க., ஆட்சிய பிடிக்குமாம். 1967ல ஆரம்பிச்சு, கிட்டத்தட்ட 58 வருஷம் ஆகியும் அதே திமுக தான் ஆட்சியில இருக்கு. அதுவும் அதிமுகவும், திமுகவும் தான் ஆட்சி கட்டில்ல மாறி மாறி இருக்கு. இத இவரு





வந்து மாத்தப் போறாராம். அதுவும் திமுக தான் அரசியல் எதிரியாம். கூட்டணிக்கு கூவிக் கூவி அழைத்தும் எந்தக் கட்சியும் சீண்டிக் கூட பார்க்கல. எதுக்கு இவ்வளவு பில்டப்பு விஜய்.

## தமிழகத்தில் நடிகர்கள் தொடங்கிய கட்சிகளின் நிலைமை

தமிழ்நாட்டுல அறிஞர் அண்ணா, பெரியார் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு திமுகவில் இருந்தவர் எம்.ஜி.ஆர். 15 ஆண்டுகாலம் திமுகவில் இருந்த பின்னாடி தான் அதிமுகவ ஆரம்பிச்சு, 5 வருஷத்துக்கு அப்புறம் 1977ல ஆட்சிய பிடிச்சாரு. அப்புறம் அந்த இயக்கத்தை கட்டிக் காத்து, ஜெயலலிதா ஆட்சிய பிடிச்சாங்க. இதுக்கு இடையில எம்ஜிஆர பாத்து நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தொடங்கிய கட்சி தமிழக முன்னேற்ற முன்னணி. 1988-1989 வரைக்கும் தான்





அதாவது ஒரே வருஷத்துல கட்சி டமால் ஆகிருச்சு. அடுத்து பாக்யராஜ் 1989ல் தொடங்கிய எம்ஜிஆர் மக்கள் முன்னேற்ற கழகம், டி.ராஜேந்தர் தொடங்கிய லட்சிய திராவிட முன்னேற்ற கழகம், கார்த்திக் தொடங்கிய அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி பிறகு மனித உரிமை காக்கும் கட்சி, சரத்குமார் தொடங்கிய சமத்துவ மக்கள் கட்சி (இப்போது பாஜகவில் ஐக்கியம்), கமலஹாசன் தொடங்கிய மக்கள் நீதி மய்யம், திமுக சார்பா எம்பி ஆனதுனால இப்ப இருக்காக இல்லையானு தெரியல.

## சிரஞ்சீவி தொடங்கிய கட்சி என்ன ஆச்சு?

நம்ம பக்கத்து மாநிலமான ஆந்திராவுல மெகா ஸ்டார் சிரஞ் சீவி, 2008ம் வருஷம் திருப்பதியில சுமார் 10 லட்சம் பேர திரட்டி கட்சி ஆரம்பிச்சார். அதுக்கு பிரஜா ராஜ்ஜியம் கட்சினு பேரு வச்சாரு. எப்டியும் ஆட்சிய பிடிச்சிருவாருனு பார்த்த நடந்த தேர்தல்ல 18 எம்எல்ஏக்கள் மட்டும்தான் கிடச்சாங்க. அப்புறமா 2011ல கட்சிய கலச்சிட்டு, காங்கிரஸ்ல போய் இணைஞ்சுட்டாரு. 10 வருஷம் கழிச்சு மீண்டும் பழைய நடிப்பு தொழிலுக்கே வந்துட்டாரு. இப்பவும் 70 வயசாகியும் ஹீரோவா நடிக்கிறாரு. அந்த மாநிலத்துல என்.டி.ராமாராவுக்கு பிறகு கட்சி ஆரம்பிச்சு, முதல்வராகிடலாம்னு நெனச்ச சிரஞ்சீவியோட நிலம பாவமாகிருச்சு.

## மாநாட்டுக்கு வருவோர் எல்லாம் ஓட்டுப் போடுவார்களா?

பொதுவா அரசியல் கட்சிகளின் கூட்டம், மாநாட்டுக்கு வர்றவங்க எல்லாருமே ஓட்டு போடுவாங்களானு கேட்டா இல்லதான். உதாரணத்துக்கு 100 பேர் கூட்டத்துக்கு வர்றாங்கன்னா பாதி பேர் தான் ஓட்டு போடுவாங்கனு சொல்ல முடியும். அதுவும் நடிகர்கள் போடுற கூட்டம், மாநாட்டுக்கு வர்றவங்கல்ல முக்கால்வாசி பேர் அவங்கல பார்க்க தான் பெரும்பாலும் வருவாங்க. நடிகர்கல நேருல பார்க்குறதுல அவுங்களுக்கு ஒரு சந்தோஷம். மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியே பல மாநாடுகள், கூட்டங்கள்ல கூட இந்த விசயத்த பத்தி சொல்லி இருப்பாரு. அதனால கூட்டத்துக்கும், ஓட்டுக்கும் சம்பந்தமே இல்லை என்பது வரலாறு.

## சேர்களை உடைத்த ரசிக தொண்டர்கள்

த.வெ.க. மாநாட்டுக்கு வந்த தொண்டர்கள் வெயில் கொடுமையால காலைல இருந்து வெட்ட வெளியில இருந்தாங்க. அதனால் சேரை எல்லாம் கொடையாவும், தரை விரிப்ப எல்லாம் பந்தலாவும் போட்டுக்கிட்டாங்க. பல இடங்கள்ல தண்ணி பற்றாக்குறையும், மாநாட்டு திடல்ல வித்த உணவுகள் விலையும் மூணு மடங்கு அதிகமாக இருந்ததா, ரசிக தொண்டர்கள் ரொம்பவே கஷ்டப்பட்டாங்க. விஜய பார்த்ததும், துள்ளிக் குதிச்ச பசங்கள அலேக்கா தூக்கி போட்டானுக அந்த பீம் பாய்ஸ். ரசிக தொண்டர்கள் கம்பிய பிடிச்சு மேல ஏறக்கூடாதுனு கிரீஸ் வேற தடவி இருந்தாங்க. அதெல்லாம் சும்மா தூசு மாதிரி ஆகிப்போச்சு. ஒரு வழியாக மாநாடு 2 மணி நேரத்துல முடிஞ்சதும், போர்க்களம் போல மாநாட்டு திடல் இருந்துச்சு. 5 ஆயிரத்துக்கும் மேல சேர்கள் சுக்குநூறா உடஞ்சு கிடந்துச்சு. பக்குவப்படாத ரசிக தொண்டர்கள வச்சு என்ன செய்றது விஜய்.

## விஜய்-க்கு குவிந்து வரும் வெளிநாட்டு பணம்

த.வெ.க. தலைவர் விஜய். அடிப்படையில் ஒரு கிறிஸ்தவர். அவரது முழுப் பெயர் ஜோசப் விஜய் தான். கட்சி தொடங்கிய பின்னர், இவருக்கு கிறிஸ்தவ அமைப்புகள் பல நிதி உதவி செய்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. அதேபோல் வெளிநாடுகளில் இருந்தும் கிறிஸ்தவ அமைப்புகள் நிதி உதவி அளிப்பதன் மூலம் சுமார் 500 கோடி ரூபாய் கட்சி நிதியாக அவர் பெற்றிருப்பதாக கட்சி நிர்வாகிகள் தரப்பில் கூறப்படுகிறது. தேர்தல் நெருங்கும் வேளையில் இந்த நிதி இன்னும் அதிகரிக்கும் என்றும் தெரிகிறது. அரசியலை தூய்மைப்படுத்தப் போகிறேன், ஊழலை ஒழிக்கப் போகிறேன், நல்லது செய்ய வந்திருக்கிறேன் என கூறும் அத்தனை பேரும் கடைசியில் அதிகாரத்தை பிடித்தவுடன் தன்னிடம் உள்ள சொத்தை காப்பாற்றவும், பணத்தை மேலும் மேலும் பணமாக்கவும் தான் என்பது காலகாலமாக நடக்கும் சம்பவம்.

# செங்கோட்டையன் மீண்டும் போர்க்கொடி

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு கெடு

பிரிந்து சென்றவர்களை கட்சியில் சேர்க்க கோரிக்கை

சசிகலா, ஓபிஎஸ், டிடிவி தினகரனுக்கு வக்காலத்து

பாஜகவின் ஊதுகுழலாக மாறிவிட்டார்

பதவிகளை பறித்து அதிரடி காட்டிய எடப்பாடி பழனிசாமி

அதிமுகவில் தொடரும் குழப்பங்கள்





அதிமுக தொடங்கப்பட்டு எம்ஜிஆர் முதன்முறையாக தேர்தலை சந்தித்து முதலமைச்சரான 1977ம் ஆண்டில் இருந்து 9 முறை எம்எல்ஏவாக இருப்பவர் செங்கோட்டையன். ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் தொகுதியில் இருந்து 8 முறையும், 1977ல் மட்டும் சத்தியமங்கலம் தொகுதியில் இருந்து தேர்வானார். இவரது சொந்த ஊர் கோபி அருகே உள்ள குள்ளம்பாளையம். கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர். அமைச்சராகவும் இருந்த செங்கோட்டையன், அதிமுகவில் நன்கு அறிமுகமான முகம். தமிழகத்தில் மூளை முடுக்கெல்லாம் அறிந்தவர் என்பதால், அதிமுக பிரசார பயண திட்டத்தை வகுத்து கொடுப்பதில் வல்லவர்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுக எடப்பாடி பழனிசாமி தலைமையில் இயங்கி வரும் சூழலில், முன்னதாக கூவத்தூரில் சசிகலா தலைமையில் நடந்த கூட்டத்தில் முதலமைச்சராக செங்கோட்டையன் பெயர் தான் பரிந்துரைக்கப்பட்டது. கட்சியில் சீனியர், கொங்கு பகுதியை சேர்ந்தவர் என்பதால் முக்கியத்துவம் தரப்பட்டது. ஆனால் இறுதியில் அந்த ரேஸில் ஜெயித்தவர் எடப்பாடி பழனிசாமி. இவரும் கவுண்டர் இனத்தை சேர்ந்தவர். ஆனால் ஏற்றிவிட்ட ஏணியை மறந்து போவதை போல், சசிகலாவை ஓரம்கட்டி, ஓபிஎஸ்-ஐ கட்சியில் இருந்து நீக்கி, தனக்கான ஆதரவு ஆட்களோடு, கட்சியை வழிநடத்தி வருகிறார் சாணக்கியர் எடப்பாடி. இந்த வேள்வியில் டிடிவி தினகரன் தனிரகம். தனியாக சென்று அமமுக கட்சியை தொடங்கி நடத்தி வருகிறார்.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு கிட்டத்தட்ட 9 ஆண்டுகளில் எடப்பாடி தலைமையிலான அதிமுக மோசமான தோல்விகளையே சந்தித்துள்ளது. உள்ளாட்சி தேர்தல், 2019 நாடாளுமன்ற தேர்தல், 2021 சட்டமன்ற தேர்தல், அதன் பின்னர் நடந்த உள்ளாட்சி தேர்தல், 2024 நாடாளுமன்ற தேர்தல் என தொடர் தோல்விதான். 2019ல் பாஜகவுடன் கூட்டு சேர்ந்து, ஒரு தொகுதியில் (தேனி எம்.பி., தொகுதி) மட்டும் ஓபிஎஸ் மகன் ரவீந்திரநாத் வெற்றி பெற்றார். 2021ல் அதே பாஜகவுடன் கூட்டு சேர்ந்து, எதிர்க்கட்சியானது அதிமுக. 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவிடம் இருந்து பிரிந்து சென்றும் ஒரு தொகுதியில் கூட ஜெயிக்க முடியாமல் மண்ணைக் கவ்வியது.

வரும் 2026 தேர்தலிலாவது எப்படியாவது ஜெயித்தாக வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு, மீண்டும் பாஜகவுடன் அதிமுக கூட்டு. அதேநேரம், அதிமுகவில் இருந்து ஓரம் கட்டப்பட்ட சசிகலா, ஓபிஎஸ், டிடிவி தினகரன் ஆகியோர் தனித்தனி அணியாக செயல்பட்டாலும், அதிமுக ஒருங்கிணைய வேண்டும் என தொடர்ந்து தூது விட்டு வருகின்றனர். இதை எடப்பாடி பழனிசாமி விரும்பாததாலும், தனது தலைமைக்கு சிக்கல் ஏற்படும் என்பதாக கருதி முரண்டு பிடித்து வருகிறார். பாஜகவுடன் கூட்டு சேர்ந்த நிலையில், பாஜக கூட்டணியில் இருந்த ஓபிஸ், டிடிவி தினகரனை ஓரம்கட்டி, கூட்டணியில் இருந்து விலகவும் காய் நகர்த்தப்பட்டுள்ளது.

அதிமுக- பாஜக வென்றால் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி தான் என முழங்கி வரும் அமித்ஷாவுக்கு எடப்பாடி பழனிசாமியின் தனிக்கட்சி ஆட்சிதான் என்ற வாதம் கடுப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனால் கூட்டணியில் இருந்தாலும், எடப்பாடி பழனிசாமிக்கு கட்சியில் இருக்கும் சீனியர் மூலம் குடைச்சலை கொடுக்க திட்டமிட்டு, செங்கோட்டையன் மூலம் வேலையை கச்சிதமாக செயல்படுத்தி வருகிறார். அதன் வெளிப்பாடு தான் செங்கோட்டையனின் மனம் திறந்து பேசுகிறேன் என்ற தனிரூட்.





செப்டம்பர் 5ம் தேதி செய்தியாளர்களை சந்தித்த அவர், பிரிந்தவர்களை ஒருங்கிணைக்க வேண்டும், இதற்கு 10 நாள் கெடுவும் விதித்தார். கடைசி வரை எடப்பாடி பழனிசாமி பெயரை உச்சரிக்கவில்லை. சசிகலா, ஓபிஎஸ், டிடிவி தினகரனை கட்சியில் மீண்டும் சேர்க்க வலியுறுத்துவீர்களா என்ற கேள்விக்கும், நேரடியாக அவரிடம் பதில் இல்லை. அப்படி 10 நாள் கெடு முடிந்தும், யாரையும் கட்சியில் மீண்டும் சேர்க்கவில்லை என்றால் உங்கள் முடிவு என்ன என்பதற்கு, நெருங்கிய நண்பர்கள் (?) இருக்கிறார்கள், அவர்களுடன் கலந்தாலோசித்து முடிவு எடுப்பேன் என, பாசாங்கு காட்டிவிட்டு சென்றுவிட்டார்.

ஏற்கனவே கடந்த மார்ச் மாதம் கூட இதேபோல், எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக தனி ஆவர்த்தனம் புரிந்த செங்கோட்டையன் பின்னர் கப்சிப் ஆனார். தற்போது மீண்டும் வேட்டியை ஏத்திக்கட்டி சண்டைக்கு வாடா என்கிற ரேஞ்சில் சண்டை செய்கிறார். அப்படி செங்கோட்டையன் தனி ஆவர்த்தனம் புரியும்பட்சத்தில் சசிகலா, ஓபிஎஸ், டிடிவி தினகரன், நான்காவதாக செங்கோட்டையன் என எண்ணிக்கை மட்டும் உயருமே தவிர, பெரிய மாற்றம் ஒன்றும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. ஏனென்றால் பாஜக தெளிவாக காய் நகர்த்தி வருகிறது. அதிமுகவில் இருக்கும் தலைவர்களை எல்லாம் கொம்பு சீவி விட்டு கட்சியில் இருந்து பிரித்து, பின்னர் அவர்களை நமக்கு கீழ் கொண்டு வந்து, அதிமுகவை கபளீகரம் செய்துவிடலாம் என்பதே அவர்களது கணக்கு. புரிந்தவன் பிஸ்தா.

## பதவி பறித்து அதிரடி காட்டிய எடப்பாடி பழனிசாமி

**செங்கோட்டையன் கெடு விதித்து 24 மணி நேரத்துக்குள்ளாக அவரது அதிமுக அமைப்பு செயலாளர் பதவி, ஈரோடு புறநகர் மாவட்ட கழக செயலாளர் பதவிகளை பறித்து அதிரடி காட்டிவிட்டார் எடப்பாடி பழனிசாமி. அதற்கு பதிலாக மாவட்ட கழக செயலாளர் பதவி ஏ.கே. செல்வராஜுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை சற்றும் எதிர்பார்க்காத செங்கோட்டையன், இரண்டு நாள் கழித்து ஹிரித்துவாருக்கு மன நிம்மதிக்காக செல்வதாக கூறிவிட்டு, டெல்லி சென்றார். திரும்பி வந்த போது, உள்துறை அமைச்சர் அமித்ஷா, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரை சந்தித்ததாகவும், அதிமுக விவகாரம் குறித்து பேசியதாகவும் தெரிவித்தார். எது எப்படியோ பாஜகவின் வேலை கச்சிதமாகி வருகிறது.**

## த.வெ.க.வில் இணையும் செங்கோட்டையன்?

**அதிமுகவில் போர்க்கொடி தூக்கி உள்ள செங்கோட்டையன், விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியில் இணைவார் என்ற டாக்கும் உள்ளது. அப்படி சேர வேண்டும் என்றால் எதற்கு அதிமுகவில் பிரிந்தவர்களை ஒருங்கிணைய போராட வேண்டும்?, என்ற கேள்வியும் ஒலிக்கிறது. ஒருவேளை செங்கோட்டையன் தலைமையில் ஒரு டீமை உருவாக்கி, அதிமுக த.வெ.க.வுடன் கூட்டு சேர்ந்ததாக பில்ட்அப் கொடுக்க திட்டமா? , திடீரென செங்கோட்டையன் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக பொங்குவதற்கு ஈகோ காரணமா? என பல கேள்விகள் பக்கம் பக்கமாக உள்ளன.**

# பாஜக கூட்டணியில் இருந்து டிடிவி தினகரனும் விலகல்

**ஓ.பன்னீர்செல்வத்தை தொடர்ந்து வெளியேறினார்**

**அதிமுகவின் அழுத்தம் காரணமாக விலகல்**

**விஜய்யின் த.வெ.க., கூட்டணிக்கு மாற திட்டம்**

ஓ.பன்னீர்செல்வத்தை தொடர்ந்து, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரனும் பாஜக கூட்டணியில் இருந்து விலகியுள்ளார். 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்காக பாஜகவுடன் அதிமுக கடந்த ஏப்ரல் மாதம் கூட்டணி சேர்ந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்தவர்களில் முக்கியமானவர்கள் ஓ.பன்னீர்செல்வமும், டிடிவி தினகரனும் தான். ஏனென்றால் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அவரது டீமால் கட்சியில் இருந்தே நீக்கப்பட்டவர் ஓபிஎஸ். எடப்பாடி பழனிசாமியை எதிர்த்து 2018ம் ஆண்டு கட்சி தொடங்கியவர் டிடிவி தினகரன். எதிர் எதிர் துருவங்கள் எப்படி கூட்டணியில் சாத்தியமா என்ற மில்லியன் டாலர் கேள்வி தொடர்ந்தபட்சத்தில் திருச்சிக்கு பிரதமர் வருகையின்போது தன்னை அழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து கூட்டணியில் இருந்து வெளியேறினார் (வெளியேற்றப்பட்டார்) ஓ.பன்னீர்செல்வம்.

இதற்கு காரணமாக ஓபிஎஸ், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரனை குறிப்பிட்டார். தான் பலமுறை தொடர்பு





கொண்டும் போனை நயினார் எடுக்கவில்லை. தன்மானத்தை இழக்க தயாராக இல்லை என்ற விரக்தியில் வெளியேறியதாக ஓபிஎஸ் மனம் வெதும்பினார். அடுத்த நாளே முதல்வர் மு.க.ஸ்டாலினை ஒரே நாளில் இரண்டு முறை சந்தித்து விட்டு தனது மனக்குமுறலை கொட்டித் தீர்த்துவிட்டு வந்தார். திமுகவில் இணையப் போகிறாரா அல்லது திமுக கூட்டணியில் இணையப் போகிறாரா என்ற பலமான கேள்விக்கு அவரது நடவடிக்கை வித்திட்டது.

அந்த வரிசையில் ஓ.பன்னீர்செல்வம் வரிசையில் பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக அறிவித்து அடுத்த அதிர்ச்சியை தந்துள்ளார் டிடிவி தினகரன். தென்மாவட்டங்களில் முக்குலத்தோரின் ஆதரவு உள்ள அவர் ஓபிஎஸ்-ஐ போல் வெளியே வந்தது, பல்வேறு அரசியல் சுழற்சிகளுக்கு ஆட்படுத்தி இருக்கிறது. 2019ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் 38 தொகுதிகளில் போட்டியிட்ட அமமுக, மொத்தம் 22 லட்சத்து 6 ஆயிரத்து 108 வாக்குகளைப் பெற்றது. விழுக்காடு அடிப்படையில் அக்கட்சிக்கு கிடைத்த வாக்குகள் 5.38 சதவீதம். இது அதிமுகவின் தோல்விக்கு வித்திட்ட காரணிகளில் முக்கியமானது. 2024 மக்களவை தேர்தலில் தேனி தொகுதியில் பாஜக கூட்டணி சார்பில் போட்டியிட்ட டிடிவி தினகரன், 2,78,825 வாக்குகளை பெற்று தோல்வி அடைந்தார். 2021 சட்டமன்ற தேர்தலில் அமமுக 165 இடங்களில் போட்டியிட்டு, 2.35 சதவீத வாக்குகளை பெற்றது. அமமுகவுக்கு என்று தனி வாக்கு வங்கி இருப்பதை தேர்தல் முடிவுகள் காட்டின.

2024 நாடாளுமன்ற தேர்தலில் தனித்து விடப்பட்ட பாஜகவுக்கு அப்போது கை கொடுத்தவர்கள் தினகரனும், ஓ.பி.எஸ்ம். இப்போது அதிமுக பாஜக கூட்டணிக்கு இழுத்து வரப்பட்டதால், டிடிவி தினகரனையும், ஓபிஎஸ்-ஐயும் முதுகில் குத்தும் வேலையில் இறங்கிவிட்டது பாஜக. அதனால் தான் அதிமுக கூட்டணி உதயமான ஏப்ரல் மாதம் முதல் இருவரும் ஒதுக்கியே வைக்கப்பட்டனர். அரசியல் அரங்கில் இதுபோன்ற எதிரிக்கு எதிரி நண்பன் என்பது சர்வசாதாரணம்.

## விஜய் கட்சியில் இணையும் ஓபிஎஸ்-டிடிவி தினகரன் அணிகள்


**திமுக அணியை பொருத்தமட்டில் கூட்டணி கட்சிகளால் நிரம்பி வழிகிறது. திமுக, காங்கிரஸ், மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், மனித நேய மக்கள் கட்சி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் என பிரதான கட்சிகளால் கட்டமைக்கப்பட்டு, வீறு நடைபோடுகிறது. தேர்தலின்போது இவர்களுக்கு சீட்டு வழங்குவதே பெரிய பாடு. இதில் புதிதாக தேமுதிக, பாமக (ராமதாஸ் அணி) இணையும்பட்சத்தில் இன்னும் சிக்கல். அதனால் ஓபிஎஸ்-டிடிவி தினகரன் அணிகள், திமுக கூட்டணியில் இணைந்தாலும் சீட்டு கிடைப்பது சுலபம் அல்ல. அதனால் திமுக, அதிமுக இரு கூட்டணிகளுக்கு மாற்றாக விஜய் கட்சி தான் ஒரே ஆப்சன். அதனால் அங்கு இணைந்து வருங்கால முதல்வர் விஜய் என கோஷம் எழுப்ப வேண்டியது தான்.**


RR
COLLECTIONS
1
CELEBRATING
Anniversary
Thanks
our Clients
Elegance in every thread
JBS NIVAS 2/1 | VENKATAPATHY STREET | OLD WASHERMANPET | CHENNAI - 21 | 81899 0900 @ RR Collection

PeeYesYem HYUNDAI
DRIVE TO SUCCESS

HYUNDAI




TOP4
HIRE DRIVERS
TOP-4
TOP-4
DAY OR NIGHT,
Ride's Always Right!
WITH TOP 4 DRIVERS!
DOWNLOAD TOP4 HIRE DRIVERS APP
CHENNAI HO: 044 2828 7777
top4calldrivers.com
SCAN TO DOWNLOAD APP




TIMES OF REPUBLIC TAMIL MONTHLY RNI. NO: TNTAM/2022/82294
Owned Published and printed by C.NAVIN PRAKASH, Published from NO,33 PRINCE VILLAGE APTMS, PHASE 2 BLOCK NO C15, DOOR NO.303 ILAIYA MUDALI STREET TONDIARPET, CHENNAI-.600081. & printed at SEKAR OFFSET PRINTERS, No.168/50, BIG STREET, CHEPAUK, Chennai - 600 005. Editor C.NAVIN PRAKASH